**இலங்கை**

**கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

**பாடத்திட்டம் 2025**

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 02

## 2804 – வணிக முகாமைத்துவம் (BMA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்
# 2804 – வணிக முகாமைத்துவம் (BMA)
# முன்னோடி வினாத்தாள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்

விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C**.
- பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C** ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| பகுதி | புள்ளிகள் |
|---|---|
| பகுதி A | 25 |
| பகுதி B | 50 |
| பகுதி C | 25 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும்.
- மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
பதினைந்து கட்டாய வினாக்கள்

**பகுதி A**

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 01***

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடைகளின் இலக்கங்களை அவற்றுக்குரிய வினா இலக்கங்களுடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.

1.1 ஒரு குறித்த நேரத்திலுள்ள உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையேயான தொடர்பு :

(1) பயனுறுதித்தன்மை
(2) உற்பத்தித்திறன்
(3) வினைத்திறன்
(4) முகாமைத்துவம்.

1.2 பின்வருவனவற்றில் எது மனித வள முகாமைத்துவத்தின் (HRM) தொழிற்பாடுகளை சிறப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது?

(1) பயிற்சியும் அபிவிருத்தியும், வாடகைக்கமர்த்தல், ஆட்சேர்ப்பு மற்றும் பாதீடிடல்.
(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், மற்றும் கட்டுப்படுத்தல்.
(3) ஆட்சேர்ப்பு, பயிற்சியும் அபிவிருத்தியும், செயலாற்றுகை முகாமைத்துவம், மற்றும் சேமநல முகாமைத்துவம்.
(4) தெரிவு செய்தல், ஆட்சேர்ப்பு, பிணக்கு கையாளுதல், மற்றும் ஏற்பாட்டியல்.

1.3 ஓர் ஆடைத் தயாரிப்பு நிறுவனத்தில் உள்ள விநியோகச் சங்கிலி மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் முதன்மைச் செயற்பாடுகளை பின்வருவனவற்றில் எது சிறப்பாக விபரிக்கிறது?

(1) நவநாகரிக ஆடைகளை வடிவமைத்தல், அழகுநயமானவர்களை (models) வாடகைக்கு அமர்த்தல், விளம்பரப்படுத்தல் பிரச்சாரங்களைத் தொடங்குதல், அழகுநயக் காட்சிகளை ஒழுங்கமைத்தல்.
(2) மூலப் பொருள்களைப் பெறுதல், உற்பத்தி அட்டவணைகளை முகாமை செய்தல், இருப்புக் கட்டுப்பாடு, முடிவடைந்த ஆடைகளை விநியோகம் செய்தல்.
(3) ஆடைகளின் விலைகளை நிர்ணயித்தல், இலச்சினைகளை வடிவமைத்தல், சில்லறை விற்பனை நிலையங்களைத் திறத்தல், நவநாகரிகப் போக்குகளை எதிர்வுகூறல்.
(4) ஆடைகளின் வடிவமைப்புகளை அங்கீகரித்தல், பண்டக்குறி பங்குடமைகளை முகாமை செய்தல், சமூக ஊடக சந்தைப்படுத்தலை மேற்பார்வை செய்தல்.

1.4 பின்வருவனவற்றில் நிறுவன மாற்றத்தை ஊழியர்கள் எதிர்ப்பதற்கான ஒரு பொதுவான காரணமாக அமைவது எது?

(1) அதிகரித்த சம்பளம் மற்றும் சிறந்த வேலை நிலைமைகள்.

(2) தெரியாத பயம் மற்றும் தொழிற் பாதுகாப்பு இழப்பு.

(3) மேம்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கிடைப்பனவு.

(4) முகாமையிலிருந்தான தெளிவான மற்றும் திறந்த தொடர்பாடல்.

1.5 பின்வருவனவற்றில் நிறுவன வடிவமைப்பைப் பாதிக்கின்ற ஒரு காரணியாக அமைவது எது?

(1) நிறுவனத்தின் அளவு. (2) தந்திரோபாயம்.

(3) தொழினுட்பம். (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

கீழே இல. **1.6** தொடக்கம் **1.8** வரை உள்ள கூற்றுக்கள் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடையை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.

1.6 வழங்கல் சங்கிலி முகாமைத்துவமானது முடிவுப் பொருள்களின் விநியோகம் மற்றும் போக்குவரத்து மீது மாத்திரமே கவனம் செலுத்துகிறது.

1.7 வேலை வடிவமைப்பு என்பது நிறுவனமொன்றிலுள்ள நபர்களுக்கான வேலைகளை உருவாக்குதல் மற்றும் தயாரித்தல்.

1.8 ஒரு நிறுவனத்தில் உள்ள கலாசார மாற்றம் என்பது பொதுவாக நடைமுறைப்படுத்த இலகுவானதும் விரைவானதும் ஆகும். (01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

இல. **1.9** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக் குறிக்குள் இருந்து சரியான சொல்லை / சொற்களைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையை வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.

1.9 பயனுறுதிமிக்க தொடர்பாடலின் ஒரு முக்கிய பகுதி பெறுநரிடமிருந்து தீவிரமாக ………………….. (அவதானித்தல் / கேட்டல்) ஆகும்.

1.10 ………………… (பின்னூட்டக் / முன்னூட்டக்) கட்டுப்பாடானது நாம் முன்னதாக என்ன செய்ய முடியும் என்பதை மையமாகக் கொண்டு, எமது திட்டங்களை வெற்றிகரமாக அடைந்துகொள்ள உதவுகிறது.

(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.

1.11 “இயல்பான மாற்றம் (Emergent Change)” என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

1.12 ஒரு நிறுவனத்திற்கு ‘‘நிறுவன நடத்தை’’ ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களைப் பட்டியலிடுக.

1.13 தலைமைத்துவக் கோட்பாடுகளின் இரண்டு (02) வகைகளைக் குறிப்பிடுக.

1.14 உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு (02) பிரதான உற்பத்தி முறைகளைக் குறிப்பிடுக.

1.15 பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்கான இரண்டு (02) வகையான தடைகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

***பகுதி A முடிவு***

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**

**பகுதி B**

(மொத்தம் 50 புள்ளிகள்)

***வினா 02***

**XYZ Apparel** என்பது வளர்ந்துவரும் ஆடைக் கம்பனியாகும். கம்பனியின் முகாமையானது ஒட்டுமொத்த வணிகத்தின் வினைத்திறன், பயனுறுதித்தன்மை, மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை எவ்வாறு மேம்படுத்தலாம் என ஆராய்கிறது. அதற்கிணங்க, மரபுசார் முகாமைத்துவ அணுகுமுறையின்படி கடுமையான விதிகள் மற்றும் நியமப்படுத்தப்பட்ட செயன்முறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை ஒரு முகாமைத்துவக் குழு எடுத்தியம்பியுள்ளது. எவ்வாறாயினும், மற்றுமொரு முகாமைத்துவக் குழு ஊழியர்களின் ஊக்கம் மற்றும் குழுவேலையில் கவனம் செலுத்தி, நடத்தைசார் முகாமைத்துவ அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. இதற்கிடையில், உயர் முகாமைத்துவக் கூட்டத்தின்போது, சந்தைப் போட்டி தீவிரமடைந்து வருவதாகவும் **XYZ Apparel** இற்கு ஒரு தந்திரோபாய சந்தைப்படுத்தல் அணுகுமுறை கட்டயமாகத் தேவை எனவும் குறிப்பிடப்பட்டது. அதற்கிணங்க, சந்தைப்படுத்தல் பிரிவானது வாடிக்கையாளர் விருப்பங்களை ஆராய்ந்த பின்னர் ஒரு பிரச்சாரத்தை ஆரம்பித்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மரபுசார் நிறுவனக் கோட்பாட்டின் நான்கு (04) முகாமைத்துவ அடிப்படைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) நிறுவன நோக்கங்களை அடைவதில் **XYZ Apparel** இற்கு வினைத்திறனான மற்றும் பயனுறுதிவாய்ந்த சந்தைப்படுத்தல் முகாமைத்துவச் செயன்முறைகள் ஏன் முக்கியமானவை என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***வினா 03***

**ABC Solutions** என்பது விரைவாக வளர்ந்துவருகின்ற ஒரு மென்பொருள் உருவாக்கக் கம்பனி ஆகும். வளர்ச்சியை முகாமை செய்வதற்காக, கம்பனியின் தலைமையானது வகிபாகங்கள், பிரிவுகள், மற்றும் அறிக்கையிடல் வரிசைகளைத் தெளிவாக வரையறுத்து, நிறுவனக் கட்டமைப்பை மீள்வடிவமைப்புச் செய்ய முடிவு செய்துள்ளது. அவர்கள் குழுக்களை பயனுறுதிமிக்க வகையில் ஒழுங்கமைப்பதற்காக குறிப்பிட்ட படிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அதே நேரத்தில், புதிய கட்டமைப்பானது அவர்களுடைய புத்தாக்க உத்திகள் மற்றும் விரைவான சந்தைப் பிரதிபலிப்புகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என விரும்புகின்றார்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **ABC Solutions** பின்பற்ற வேண்டிய ஒழுங்கமைப்புச் செயன்முறையின் படிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கம்பனியானது தொழிற்பாடு சார்ந்த நிறுவனக் கட்டமைப்பொன்றை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டிருப்பதாகக் கருதி, தொழிற்பாட்டு அடிப்படையிலமைந்த **ABC Solutions** இற்கான மாதிரி நிறுவனக் கட்டமைப்பொன்றை **எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(c) வெவ்வேறு சந்தைத் துண்டங்களைப் பூர்த்தி செய்வதற்காகவும் தங்களது ஒட்டுமொத்த சந்தைப் பங்கை விரிவாக்குவதற்காகவும் வெவ்வேறு செயற்றிட்டக் குழுக்களை அறிமுகப்படுத்த கம்பனி திட்டமிடுகிறது எனக் கருதி, அவர்களுடைய புதிய சந்தை விரிவாக்கத் தந்திரோபாயம் தொடர்பாக **ABC Solutions** இற்கான வரிசையமைப்புக் கட்டமைப்பின் (Matrix structure) பொருத்தப்பாட்டுத் தன்மையை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### *வினா 04*

**PQR Publishers** என்பது அச்சு வடிவிலும் டிஜிடல் வடிவிலும் புத்தகங்களைத் தயாரித்து விநியோகம் செய்கின்ற ஒரு வளர்ந்துவரும் கம்பனி ஆகும். அண்மையில், கம்பனி அச்சிடல் மற்றும் விநியோகத் (shipping) தாமதங்களை எதிர்கொண்டது. இதன் விளைவாக வாடிக்கையாளர்கள் அதிருப்தியடைந்தனர். இந்தப் பிரச்சினையைச் சரிசெய்வதற்காக, **PQR publishers** அச்சுப்பதிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடன் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக, கைமுறையால் ஏற்படும் வழுக்களைக் குறைத்து, வெளியீட்டுச் செயன்முறையை விரைவுபடுத்த டிஜிடல் பணிப்பாய்வு முறைமைகள் மற்றும் தன்னியக்கமாகப் பிழைதிருத்தும் கருவிகளை செயற்படுத்தியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **PQR Publishers** தமது வணிகச் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு பயனுறுதிமிக்க வழங்கல் சங்கிலி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம் என்பன எவ்வாறு உதவ முடியும் என்பதை இரண்டு (02) வழிகளில் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **PQR Publishers** செயற்றிறனை மேம்படுத்துவதற்காக அதன் செயற்பாடுகளில் புதிய தொழினுட்பத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய மூன்று (03) வழிகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### *வினா 05*

ஒரு வளர்ந்துவரும் நிகழ்நிலைக் கல்வித் தளமான **KLM Learning** ஆனது உயர்ந்தளவான பணியாளர் வெளியேற்றத்தையும் குறைந்தளவான ஊழியர் ஈடுபாட்டையும் அனுபவித்தது. இந்தச் சவால்களை நிவர்த்தி செய்வதற்கு மனித வளப் (HR) பிரிவானது நிறுவனத்தின் இலக்குகள், மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் ஒரு செயற்றிறன் முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்தியது. அத்துடன் சுய சேவை நுழைவு வழிகள், தன்னியக்கப்படுத்தப்பட்ட சம்பளப் பட்டியல், மற்றும் மெய்நிகர் ஆற்றுப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு டிஜிடல் HR தளத்தை அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சிகள் ஊழியர்களின் அனுபவத்தை மேம்படுத்துதல், HR செயன்முறைகளை நெறிப்படுத்தல், மற்றும் கம்பனியின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டிருந்தன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **KLM Learning** இல் ‘மனித வள முகாமைத்துவத்’ தொழிற்பாடு நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய மூன்று (03) வழிகளை பொருத்தமான உதாரணங்களுடன் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **KLM Learning** இற்கு பயனுள்ளதாக இருக்கக்கூடிய மனித வள முகாமைத்துவத்தில் வளர்ந்துவரும் போக்குகள் (emerging trends) இரண்டை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### *வினா 06*

**Thrive Cafe** என்பது ஒரு சிறிய தேநீர் கடை சங்கிலியாகும். அது உள்நாட்டுச் சந்தையில் வலுவான போட்டியை எதிர்கொள்கிறது. வணிகமானது, அது தனித்து நிற்பதற்காக ஏற்பிசைவு செய்யத்தக்க சின்னம், சூழலுக்கு உகந்த பொதியிடல், மற்றும் நீடித்திருக்கத்தக்க ஆதாரங்களில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒரு தனித்துவமான பண்டக்குறி அடையாளத்தை உருவாக்கியுள்ளது. மேலும், **Thrive Cafe** சமூக ஊடகப் பிரச்சாரங்கள், செல்வாக்குமிக்கவர்களின் ஒத்துழைப்புகள், இலக்குவைக்கப்பட்ட டிஜிடல் விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் அதன் நிகழ்நிலை இருப்பையும் விரிவுபடுத்தியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Thrive Cafe** போன்ற சிறிய வணிகமொன்றிற்கு பண்டக்குறியின் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **Thrive Cafe** இல் டிஜிடல் சந்தைப்படுத்தல் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூன்று (03) அனுகூலங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### *பகுதி B முடிவு*

**ஒரு கட்டாய வினா**

(25 புள்ளிகள்)

## பகுதி C

### *வினா 07*

**TechNova Solutions** என்பது பல்வேறு வணிகத் தகவல் தொழினுட்பம் (IT) தொடர்பான ஆலோசனை சேவைகளை வழங்குகின்ற ஒரு நடுத்தர அளவிலான ஆலோசனை நிறுவனமாகும். இந்நிறுவனம் சமீபத்தில் நிறுவன ரீதியான டிஜிடல் உருமாற்ற முயற்சியைத் தொடங்கியது. இதில் முகில் அடிப்படையிலான கணக்கீட்டு முறைமைகள், செயற்கை நுண்ணறிவு (AI), திறன்மிக்க தரவுப் பகுப்பாய்வு, மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவக் கருவிகள் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த டிஜிடல் உருமாற்றங்கள் அனைத்தும் நிதி, சந்தைப்படுத்தல், மனித வளங்கள், மற்றும் செயற்பாடுகள் உள்ளிட்ட நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலும் தாக்கம் செலுத்தும் எனக் கருதப்படுகிறது.

முன்னர் பாரம்பரிய கணக்குப் பதிதல் மற்றும் கணக்கீட்டில் கவனம் செலுத்திய நிதிப் பிரிவானது தற்போது தரவுப் பகுப்பாய்வு, நிகழ் நேர அறிக்கையிடல், மற்றும் நிதி முன்னறிவிப்பு ஆகியவற்றிற்குத் தேவைப்படும் புதிய டிஜிடல் கருவிகள் மற்றும் நுட்பங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கும். நிறுவனத்தின் முகாமையானது எந்தவொரு தொழில்துறையிலும் நவீன நிதி நிபுணர்களுக்கு அவசியமானதாகத் தோன்றும் இத்தகைய டிஜிடல் உருமாற்றங்களுக்குத் தேவையான தொழினுட்ப ஆற்றல்கள் மற்றும் திறன்களைக் கட்டியெழுப்ப பயிற்சி மற்றும் மேம்படுத்தல் வேலைப்பட்டறைகளை ஏற்பாடு செய்துள்ளது.

அதே நேரத்தில், உள்ளக மீளாய்வொன்றின் பின்னர், இந்த உருமாற்றமானது நிச்சயமற்றதன்மை, தெளிவின்மை, மற்றும் நிறுவன ஊழியர்களிடையேயான எதிர்ப்பு ஆகியவற்றை உருவாக்கியுள்ளதை நிறுவனத்தின் முகாமை உணர்ந்தது. அதற்கிணங்க, நிறுவனத்தின் முகாமை, ஊழியர்களின் ஏற்பிசைவு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இலக்குகள் பற்றிய தெளிவான தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஊக்கப்படுத்தல் தந்திரோபாயம் ஒன்றை அறிமுகப்படுத்தியது.

இந்த உருமாற்றத்தின்போது நிறுவனத்தின் தீர்மானமெடுத்தலுக்கு வழிகாட்ட, **TechNova** துல்லியமான மற்றும் சரியான நேரத்திலான தகவல்களைப் பெரிதும் நம்பியுள்ளது. வாராந்த கட்டுப்பாட்டுப் பலகங்கள், நிகழ் நேர அறிக்கைகள் மற்றும் ஊழியர்களின் பின்னூட்டப் பொறிமுறைகள் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

இறுதியாக, கம்பனியின் நிறைவேற்று அதிகாரிகள், இந்த உருமாற்றமானது தொழினுட்பம் சார்ந்த வணிகத் தீர்வுகளில் முன்னணியில் இருப்பது என்ற **TechNova** இன் நீண்டகாலத் தந்திரோபாயத்துடன் ஒத்துப்போகிறது என்பதை வலியுறுத்தினர். உயர் மட்ட முகாமையானது அனைத்து மட்டங்களிலும் உள்ள நிறுவன உறுப்பினர்களின் ஆதரவுடன் விரிவான முறையில் தந்திரோபாய முகாமைத்துவச் செயன்முறையைத் தொடங்கியது. தலைமையானது தந்திரோபாயத்தை ஒரு தடவைக்கான திட்டமாக அல்லாமல், மாறாக கம்பனியை போட்டித்தன்மையுடனும் எதிர்காலத்திற்கும் தயாராக வைத்திருக்கின்ற ஒரு மாறும் செயன்முறையாகக் கருதியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) புதிய தொழினுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் காரணமாக **TechNova** இலுள்ள நிதிசார் நிபுணர்கள் விருத்தி செய்ய வேண்டிய நான்கு (04) புதிய ஆற்றல்களை (competencies) **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(b) **TechNova** டிஜிடல் உருமாற்றம் செய்யப்படும்போது ஊழியர்களை ஊக்கப்படுத்துவது ஏன் அவசியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **TechNova** இல் தீர்மானமெடுத்தல் செயன்முறையில் தகவல் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(d) வெற்றிகரமான உபாயம் ஒன்றின் இரண்டு (02) பண்புகளை (characteristics) **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(e) **TechNova** இனால் பயன்படுத்தக்கூடிய பகுத்தறிவான திட்டமிடல் வேலைச்சட்டகத்தில் (rational planning framework) உள்ள படிமுறைகளைக் **குறிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

***பகுதி C முடிவு***

# செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிவு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதி மிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 02

## 2804 – வணிக முகாமைத்துவம் (BMA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
பதினைந்து (15) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.1 | - | 3 | 1.6 | - | தவறானது |
| 1.2 | - | 3 | 1.7 | - | சரியானது |
| 1.3 | - | 2 | 1.8 | - | தவறானது |
| 1.4 | - | 2 | 1.9 | - | கேட்டல் |
| 1.5 | - | 4 | 1.10 | - | முன்னூட்டம் |

**(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)** **(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)**

1.11 **திட்டமிடப்பட்ட மாற்றம்** நிலையற்ற சூழலில் செயற்படுகின்ற நிறுவங்களுக்குப் பொருத்தமற்றதாகக் கருதப்படுகிறது. மாற்றம் தொடர்ந்து நிகழ்கிறது, சுற்றுச்சூழல் கணிக்க முடியாதது, மற்றும் நிறுவனம் அடிக்கடி சூழலுடன் ஒத்துப்போக வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த அணுகுமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

**(02 புள்ளிகள்)**

1.12

- இது மக்களின் நிறுவன மற்றும் சமூக நோக்கங்களை அடைவதன் மூலம் சிறந்த உறவைக் கட்டியெழுப்புகிறது.
- இது நடத்தை, பயிற்சி மற்றும் அபிவிருத்தி, மாற்ற முகாமைத்துவம், தலைமைத்துவம், அணிகள் போன்ற பரந்தளவிலான மனித வளங்களை உள்ளடக்கியது.
- இது முகாமைத்துவத்தின் சாரமான ஒருங்கிணைப்பைக் கொண்டு வருகிறது.
- இது நிறுவனத்தின் நன்மதிப்பை மேம்படுத்துகிறது.
- இது நோக்கங்களை விரைவாக அடைவதற்கு உதவுகிறது.
- இது வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துகிறது.
- இது ஊக்கப்படுத்தலை எளிதாக்குகிறது.
- இது உயர் வினைத்திறனுக்கு வழிவகுக்கிறது.
- இது நிறுவனத்தில் உறவுகளை மேம்படுத்துகிறது.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.13

– பண்புக் கோட்பாடு.
– பாணி (நடத்தைசார்) கோட்பாடு.
– சூழ்நிலைக் கோட்பாடுகள்.
– உருமாற்றக் கோட்பாடு
– பரிவர்த்தனைக் கோட்பாடு. **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.14

– தொழில் உற்பத்தி.
– தொகுதி உற்பத்தி.
– வெகுசன உற்பத்தி.
– உரிய நேரத்தில்.
– வளமற்ற உற்பத்தி.
– தள்ளல் மற்றும் இழுப்பு உற்பத்தி. **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

1.15
- மொழித் தடைகள்.
- உளவியல் தடைகள்.
- கலாசாரத் தடைகள்.
- தொழினுட்பத் தடைகள்.
- உணர்ச்சித் தடைகள்.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***பகுதி A முடிவு***

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**

**பகுதி B**

(மொத்தம் 50 புள்ளிகள்)

***வினா 02 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 1 –** முகாமைத்துவத்திற்கான அறிமுகமும் முகாமைத்துவத்தின் வெவ்வேறு கண்ணோட்டங்களும்

**அலகு 4 –** சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

கற்றற் பேறுகள் - முகாமைத்துவத்தின் பல்வேறு கண்ணோட்டங்களின் அம்சங்களை விபரித்தல்

- சந்தைப்படுத்தல் தொழிற்பாடு எவ்வாறு நிறுவன நோக்கங்களை அடைவதற்குப் பங்களிக்கிறது என்பதை ஆராய்தல்.

**(a)**

(1) **வேலைப் பிரிப்பு :**

தனிநபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியை பயனுறுதிவாய்ந்த முறையில் நிறைவு செய்வதில் அவர்களின் முழுக் கவனத்தையும் செலுத்துவதை உறுதி செய்யும் வகையில் அவர்களுடைய சிறப்புத்தேர்ச்சிகளின் அடிப்படையில் வேலை பிரிக்கப்பட வேண்டும்.

(2) **அதிகாரமும் பொறுப்பும் :**

அதிகாரமும் பொறுப்பும் ஒன்றுடனொன்று தொடர்புடையதாகும். அதிகாரமானது கட்டளைகளை வழங்குவதற்கான உரிமை எனக் கருதப்படுகின்ற அதே வேளை பொறுப்பு என்பது பொறுப்புக் கூறத்தக்கதாக இருப்பதாகும். எனவே, சரியான கீழ்ப்படிதலுக்கான அதிகாரம் யாருக்கு வழங்கப்படுகின்றதோ அவர், ஏதாவது தவறு நடந்தால் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அதிகாரமானது பதவியுடன் சேர்த்துப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

(3) **ஒழுக்காறு :**

நிறுவனத்தில் பணியுரியும் தனிநபர்கள் நல்ல ஒழுக்காற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒழுக்காறு என்பது ஊழியர்கள் மற்றவர்களை நோக்கிக் காட்டுகின்ற கீழ்ப்படிவு, நடத்தை, மதித்து நடத்தல் என்பவற்றைக் குறிக்கிறது.

(4) **கட்டளையின் ஓரினத்தன்மை :**

இந்தக் கோட்பாட்டிற்கு இணங்க, நிறுவனத்திலுள்ள ஒரு தனிநபர் ஒரேயொரு மேற்பார்வையாளரிடமிருந்து மட்டும் கட்டளைகளைப் பெறுவதாகும். தனிநபர் ஒன்றிற்கு மேற்பட்ட மேற்பார்வையாளர்களுடன் அறிக்கையிடல் உறவைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், யாருடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது என்பதில் அதிக முரண்பாடுகள் தோன்றலாம்.

(5) **வழிப்படுத்தலின் ஓரினத்தன்மை :**

வழிப்படுத்தலின் ஓரினத்தன்மை என்பது பல்வேறு வகையான பணிகளைச் செய்யும் அனைத்து தனிநபர்கள் அல்லது குழுக்களும் நிறுவனத்தின் பொதுவான நோக்கத்தை நோக்கி வழிப்படுத்தப்பட வேண்டும்.

(6) **தனிநபர் அல்லது பொது நலனுக்கு அடிபணிதல் :**

பணியை நிறைவேற்றுவதற்கு தனிப்பட்ட மற்றும் நிறுவன நலன் ஒத்துப்போக வேண்டும். ஓர் ஊழியர் அல்லது ஊழியர்களின் குழுவின் நோக்கங்கள் நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு அப்பால் செல்லக்கூடாது.

(7) **ஆளணியினரின் ஊதியம் :**

ஊதியம் நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதுடன் ஊழியர் மற்றும் தொழில்தருநர் இருவரும் திருப்தியடைய வேண்டும்.

(8) **ஒருமுகப்படுத்தல் :**

ஒருமுகப்படுத்தலின் நோக்கம் ஆளணியினரை சிறப்பாகப் பயன்படுத்துவதாகும். ஒருமுகப்படுத்தலின் அளவு ஒவ்வொரு நிறுவனத்தினதும் இயக்கவியலுக்கு ஏற்ப மாறுபடும்.

(9) **படிநிலைச் சங்கிலி (அதிகார வரிசை):**

இதன் பொருள் நிறுவனத்தில் ஒரு சரியான படிநிலை இருக்க வேண்டும் என்பதாகும். மிக உயர்ந்த நிறுவன அதிகாரத்திலிருந்து கீழ்நிலைத் தரங்கள் வரை அதிகாரச் சங்கிலி இருக்கிறது.

(10) **கட்டளை :**

இந்தக் கோட்பாடு நிறுவனத்திலுள்ள பொருள்கள் மற்றும் மக்களின் முறையான ஏற்பாட்டுடன் தொடர்புடையதாகும். இதன் அர்த்தம், ஒவ்வொரு பொருளும் அந்தந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு பொருளுக்குமென ஒவ்வொரு இடம் இருத்தல் வேண்டும் என்பதாகும். மக்களைப் பொறுத்தவரை, ஒரு சரியான மனிதன் சரியான வேலையில் இருத்தல் வேண்டும்.

(11) **சமபங்கு :**

அனைத்து ஊழியர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும்.

(12) **ஆளணியினரின் பதவிக்காலத்தின் நிலைத்தன்மை :**

உயர்ந்தபட்ச உற்பத்தித்திறனை அடைவதற்கு ஒரு நிலையான ஊழியர் படை தேவையாகும். ஊழியர்கள் நிறுவனத்தில் தக்கவைக்கப்பட வேண்டும்.

(13) **முயற்சி :**

முகாமையாளர் தனது துணை அலுவலர்களை சிந்திக்கவும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் ஊக்கப்படுத்த வேண்டும்.

(14) **வேலைப் படையை எழுச்சியூட்டல் :**

இதன் பொருள் ஒற்றுமையே பலம், ஒவ்வொரு தனிநபரும் குறிக்கோள்களை அடைவதற்காக ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.

**(01 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(b)**

(1) **மாற்றம், பரிமாற்றம் மற்றும் பொருள்களின் நகர்வில் சந்தைப்படுத்தல் உதவிகள் :**

கொள்வனவாளரையும் விற்பனையாளரையும் இணைப்பதில் சந்தை நடவடிக்கைகள் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகின்றன. இந்த இணைப்பு நிறுவப்படவில்லையாயின், கொள்வனவாளர் தமது தேவைகளைத் திருப்திப்படுத்த முடியாமல் இருப்பதுடன் விற்பனையாளர் தமது பொருள்களை விற்பனை செய்ய இயலாமலிருக்கலாம்.

(2) **சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் பேணுவதிலும் சந்தைப்படுத்தல் உதவியாக இருக்கிறது :**

கொள்வனவாளர்கள் அவர்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய மேலதிகத் தகவல்களைத் திரட்டுவதற்கும் பின்னர் பிற போட்டி வழங்குநர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை வழங்குகிறது. இந்தப் போட்டியானது பொதுக் களத்தில் நடைபெறுவதால், வணிகங்கள் சந்தையில் நெறிமுறை நடைமுறைகளைப் பராமரிக்கவும் அதன் மூலம் நியமங்களைப் பேணவும் ஊக்குவிக்கப்படுகின்றன. தரம் மற்றும் கவலைகள் நிவர்த்தி செய்யப்படுவதால், கொள்வனவாளர்கள் குறைந்த தரமான தயாரிப்புகளால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

(3) **சந்தைப்படுத்தல் தொழில்வாய்ப்பை உருவாக்குகிறது :**

நேரடி சந்தைப்படுத்தல் இருக்குமிடத்தில், அதாவது பொருள்கள் நேரடியாக இறுதி நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுமிடத்தில், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மிகவும் குறுகியதாக இருப்பதுடன் குறைந்தளவான மக்களே ஈடுபடுகின்றனர். எவ்வாறாயினும், நடைமுறை விவரணங்களில், சந்தைப்படுத்தல் பெரும்பாலும் மறைமுகமானதாக இருப்பதுடன் இதில் சந்தைக்கு சேவை செய்வதற்கும் சுய தொழில்களில் ஈடுபடுவதற்கும் வாய்ப்புள்ள பல இடைத்தரகர்கள் ஈடுபடுகின்றார்கள்.

(4) **வருமானம் மற்றும் வருவாயின் ஆதாரமாக சந்தைப்படுத்தல் :**

சந்தைப்படுத்தலானது உற்பத்தியாளர்களுக்கு மட்டுமல்லாது விநியோகச் சங்கிலியில் உள்ள இடைத்தரகர்களுக்கும் வருவாய் ஈட்டும் வாய்ப்புகளை வழங்குகிறது. ஒரு பரந்த கண்ணோட்டத்தில், சந்தைப்படுத்தலானது பொருளாதாரத்தின் வருவாய் மட்டத்தை மேம்படுத்த பல வாய்ப்புகளை உருவாக்குகிறது.

(5) **சந்தைப்படுத்தலானது தீர்மானமெடுப்பதற்கான ஒரு அடிப்படையாகத் தொழிற்படுகிறது :**

சந்தைப்படுத்தல் சந்தை, வாடிக்கையாளர் நடத்தை, போட்டியாளர் நடவடிக்கைகள் மற்றும் முற்கணிப்புகள் பற்றிய தகவல்களையும் நுண்ணறிவுகளையும் வழங்குகிறது. இது வணிகத்தின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு முகாமைத்துவத்திற்கு உதவுகிறது.

(6) **சந்தைப்படுத்தல் புதிய யோசனைகளின் ஓர் மூலமாகச் செயற்படுகிறது :**

சந்தைப்படுத்தல் எப்போதும் மாறுகின்ற தன்மை கொண்டதாக இருப்பதால், புத்தாக்கத்திற்கான வணிக வாய்ப்பை வழங்குகிறது. பெஷன் தொழினுட்பம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றம் காரணமாக பயன்பாட்டில் இல்லாத பொருள்களை, மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் இரசனைக்கு ஏற்றவாறு புதிய திருப்தியை வழங்குவதற்காக, புதிய பொருள்களுடன் மாற்றீடு செய்ய வேண்டியேற்படலாம். எனவே சந்தைப்படுத்தல் புத்தாக்கத்திற்கான வாய்ப்புகளை வழங்குவது மாத்திரமல்லாது, வணிகத்தை அவ்வாறு செய்ய கட்டாயப்படுத்துகிறது.

(7) **வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் வணிக வளர்ச்சிக்கான ஒரு கருவியாக சந்தைப்படுத்தல் :**

உங்கள் வணிகத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு சந்தைப்படுத்தல் ஒரு முக்கியமான தந்திரோபாயமாக உள்ளது. உங்களுடைய தற்போதைய வாடிக்கையாளர்கள் எப்போதும் உங்கள் பிரதான முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்ற போதிலும் சந்தைப்படுத்தல் முயற்சிகள் இந்தத் தளத்தை விரிவுபடுத்த உதவும். சமூக ஊடக இடுகைகள் மற்றும் மின்னஞ்சல் பிரச்சாரங்கள் போன்ற சிறிய முயற்சிகள் ஏற்கனவேயுள்ள நுகர்வோரை ஈடுபடுத்துவது மட்டுமல்லாது, புதிய சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கும் செய்தியைப் பரப்ப முடியும். சாரமாக, புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுவதன் மூலம் சந்தைப்படுத்தலானது வணிகத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்கிறது.

(8) **சந்தைப்படுத்தலானது பொருளாதாரம் ஒன்றின் அபிவிருத்தியில் உதவியாக உள்ளது :**

தேசிய மட்டத்தில், சர்வதேச சந்தைகளில் உள்ள சந்தைப்படுத்தலானது பொருளாதாரத்தின் ஏற்றுமதித் திறனை மேம்படுத்துகிறது. இதன் விளைவாக நேர்மறையான வர்த்தகக் கணக்கும் சென்மதி நிலுவையும் ஏற்படுகிறது. **(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 03 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | |
|---|---|
| **அலகு 2 –** முகாமைத்துவச் செயன்முறையின் தொழிற்பாடுகள் | |
| கற்றற் பேறுகள் | - ஒழுங்கமைத்தல் படிமுறைகளை விபரித்தல். |
| | - நிறுவனக் கட்டமைப்பின் முக்கியத்துவத்தையும் அதன் மூலகங்களையும் விபரித்தல் |
| | - நிறுவனக் கட்டமைப்பு மற்றும் உபாயத்திற்கிடையேயான தொடர்பை விபரித்தல். |

**(a)**

– **வேலையை அடையாளங் காணுதலும் பிரித்தலும் :**

ஒழுங்கமைக்கப்படும் தொழிற்பாடானது சிறிய அலகுகளாக வேலையைப் பிரிப்பதுடன் ஆரம்பமாகிறது. அத்தகைய ஒவ்வொரு அலகும் ஒவ்வொரு வேலைக்கு மாத்திரம் பொறுப்பான ஒரு தனிநபருக்கு ஒதுக்கப்படுகிறது. இது முறைமையாக வேலை செய்தல் மற்றும் சிறப்புத் தேர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

– **திணைக்களமயமாக்கல் :**

வேலையானது சிறிய முகாமை செய்யக்கூடிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட வேலைகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு ஒரு திணைக்களத்தின் கீழ் வைக்கப்படுகிறது. இந்தத் தொகுக்கும் செயன்முறை திணைக்களமயப்படுத்தல் என அழைக்கப்படுகிறது. திணைக்களமயப்படுத்தலின் மிகவும் பொதுவான வழிகளாக இருப்பவை தொழிற்பாட்டு திணைக்களமயப்படுத்தலும் பிரிவுசார் திணைக்களமயப்படுத்தலும் ஆகும்.


– **கடமைகளை ஒதுக்குதல் :**

திணைக்களங்கள் உருவாக்கப்பட்டதும் ஒவ்வொரு திணைக்களமும் ஒரு தனிநபரின் பொறுப்பின் கீழ் வைக்கப்படும். பணியாளர்களின் திறன்கள் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் அந்தந்த வேலைக்கு மிகவும் பொருத்தமானவர்களுக்கு உரிய வேலை ஒதுக்கப்பட வேண்டும்.

– **அறிக்கையிடல் தொடர்புகளை நிறுவுதல் :**

கடமைகளை ஒதுக்கிய பின்னர், அனைத்து தனிநபர்களுக்கும் பொருத்தமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இந்த அதிகாரம் மற்றும் பொறுப்பு ஒதுக்கீட்டின் விளைவாக, மேலதிகாரிகளுக்கும் துணை அலுவலர்களுக்குமிடையே அதிகாரப் பொறுப்பு உருவாகிறது. இதனுடன், முகாமைத்துவப் படிநிலை (கட்டளைகளின் சங்கிலி) உருவாகிறது, அங்கு அவர்கள் யாரிடமிருந்து கட்டளைகளைப் பெற வேண்டும், யாருக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும். **(04 புள்ளிகள்)**

**(b)**




**(02 புள்ளிகள்)**

**(c)** தனித்துவமான சந்தைத் துண்டங்களை இலக்காகக் கொண்டு, பல செயற்றிட்ட அணிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருப்பதால் வரிசையமைப்புக் கட்டமைப்பு (Matrix Structure) **ABC Solutions** இற்கு மிகவும் பொருத்தமானதாகும். இந்த நிறுவன மாதிரியானது தொழிற்பாடுசார்ந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையிலான முறைமைகளை ஒன்றிணைத்து, ஊழியர்கள் தங்கள் தொழிற்பாட்டு மற்றும் செயற்றிட்ட முகாமையாளர்கள் இருவருக்கும் அறிக்கையிட உதவுகிறது. எளிமையாகக் கூறுவதாயின், வரிசையமைப்புக் கட்டமைப்பானது **ABC Solutions** இற்கு பல நன்மைகளை வழங்குகிறது.

**அனுகூலங்கள் :**

– சிறந்த ஒருங்கிணைப்பும் கட்டுப்பாடும்.

– மாறுகின்ற சூழலுக்கு ஏற்பச் செயற்படுதல்.

– வளங்களின் பயனுறுதிமிக்க பயன்பாடு.

- செயற்றிட்ட முகாமையாளர்களுக்கு அதிகாரத்தைக் கையளிப்பதுடன் உயர் மட்ட முகாமைக்குக் கிடைக்கும் போதுமானளவு நேரம்.
- உள்ளக ஒழுக்காற்று சிறப்புத் தேர்ச்சியில் சிறப்பு.
- குழு வேலையை விருத்தி செய்தல்.
- ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தல்.

ஒட்டுமொத்த வரிசையமைப்புக் கட்டமைப்பானது **ABC Solutions** இன் புத்தாக்க மற்றும் சந்தை விரிவாக்கத் தந்திரோபாயத்துடன் இணைந்து, பொருத்தமான தெரிவாக அமைகிறது. **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 04 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | |
|---|---|
| **அலகு 3 –** வழங்கல் சங்கிலியும் தொழிற்பாட்டு முகாமைத்துவமும் | |
| கற்றற் பேறுகள் | - வழங்கல் சங்கிலி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை ஆராய்தல் |
| | - ஒரு வணிகத்தின் செயற்பாடுகளில் புதிய தொழினுட்பத்தின் தாக்கத்தை விபரித்தல் |

**(a)**

- **மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு தாமதங்களைக் குறைக்கிறது :** வழங்குநர்களுடன் (அச்சுப்பொறிகள் மற்றும் விநியோகஸ்தர்கள்) ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது உரிய நேரத்தில் உற்பத்தி மற்றும் விநியோகத்தை உறுதி செய்து, தாமதங்களைக் குறைக்கிறது. அச்சிடும் பங்காளர்களுடன் அட்டவணைகளைச் சீரமைப்பதன் மூலம், **PQR Publishers** விநியோக நிலுவைகளைத் தவிர்க்கலாம் என்பதுடன் புத்தகங்கள் உரிய நேரத்தில் வாடிக்கையாளர்களைச் சென்றடைந்து திருப்தியை மேம்படுத்தலாம்.

- **தன்னியக்கப்படுத்தல் ஊடாக மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் :** பிழைதிருத்தல் மற்றும் வெளியிடுதல் பணிப்பாய்வுகளில் தன்னியக்கப்படுத்தப்பட்ட கருவிகளை நடைமுறைப்படுத்துவது கைமுறையால் ஏற்படும் வழுக்களைக் குறைத்து, செயற்பாடுகளை விரைவுபடுத்துகிறது. டிஜிடல் பதிப்பித்தல் கருவிகள் கையெழுத்துப் பிரதிகளை தானாக வடிவமைத்து, வழுக்களைச் சரிபார்க்கலாம், இதனால் பதிப்பித்தல் நேரம் பாதியாகக் குறைவடைந்து, மறுவேலையைக் குறைக்கலாம்.

- **நிகழ் நேரக் கண்காணிப்பும் வெளிப்படைத்தன்மையும் :** நன்கு முகாமை செய்யப்பட்ட வழங்கல் சங்கிலியானது புத்தகத்திற்கான கட்டளைகளையும் விநியோகங்களையும் நிகழ்நேரத்தில் கண்காணிப்பதை இயலச் செய்கிறது. **PQR Publishers** தொக்கு மற்றும் விநியோக நிலைமைகளை கண்காணிக்கவும் சிக்கல்களை விரைவாக நிவர்த்தி செய்யவும் வாடிக்கையாளர்களுக்கு தகவல் அளிக்கவும் வழங்கல் சங்கிலி மென்பொருளைப் பயன்படுத்தலாம்.

- **நெறிப்படுத்தப்பட்ட செயன்முறைகள் ஊடாக கிரயத்தைக் குறைத்தல் :** வினைத்திறனான செயற்பாடுகள் விரயங்களைக் குறைக்கின்றன, அச்சிடல் கிரயங்களைக் குறைக்கின்றன, தளவாட வழங்கல்களை (ஏற்பாட்டியல்) உகந்ததாக்குகின்றன. தளவமைப்பை வடிவமைப்பது போன்ற வழக்கமான பணிகளை தன்னியக்கப்படுத்துவதானது கைமுறையான உழைப்புக்கான தேவையைக் குறைப்பதுடன் நேரமும் செயற்பாட்டுச் செலவுகளும் மிச்சப்படுத்தப்படுகின்றன.

- **சிறந்த தேவை முன்னறிவிப்பு மற்றும் தொக்கு முகாமைத்துவம் :** தரவு சார்ந்த வழங்கல் சங்கிலி முறைமைகள், தேவையை மிகத் துல்லியமாகக் கணிக்க உதவுகின்றன. அதிகப்படியான இருப்பு அல்லது இருப்பு இல்லாத நிலையைத் தடுக்கிறது. ஒரு பிரபலமான எழுத்தாளரின் புத்தக வெளியீட்டிற்கான தேவை அதிகரிக்குமென்று **PQR** கணித்திருந்தால், வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கூடுதலாக அச்சிடும் பணிகளை முன்கூட்டியே அட்டவணைப்படுத்தலாம்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(b)**

- **கணினி உதவி வடிவமைப்பு (CAD):** கணினி உதவி வடிவமைப்பு (CAD) என்பது ஒரு பொருளை வடிவமைத்து, வடிவமைப்புச் செயன்முறையை ஆவணப்படுத்துகின்ற ஒரு கணினித் தொழினுட்பம் ஆகும். CAD என்பது ஒரு பொருளின் மூலப்பொருள்கள், செயன்முறைகள், சகிப்புத்தன்மைகள், மற்றும் பரிமாணங்களின் விரிவான வரைபடங்களை பொருளுக்கான குறிப்பிட்ட மரபுகளுடன் மாற்றுவதன் மூலம் உற்பத்திச் செயன்முறைகளுக்கு வசதியளிக்கலாம்.

  உதாரணம்: **PQR Publishers** நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் விபரமான புத்தக அட்டைகள் மற்றும் பக்க அமைப்புகளை உருவாக்க CAD மென்பொருளைப் பயன்படுத்தலாம்.

- **கணினி உதவியுடனான தயாரிப்பு (CAM):** கணினி உதவியுடனான தயாரிப்பு (CAM) என்பது தயாரிப்புச் செயன்முறைகளை எளிதாக்கி, தன்னியக்கப்படுத்துவதற்காக கணினி மென்பொருள் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற ஒரு பிரயோகத் தொழினுட்பம் ஆகும். CAM என்பது கணினி உதவிப் பொறியியலின் (CAE) வாரிசு மற்றும் பெரும்பாலும் கணினி உதவி வடிவமைப்புடன் (CAD) இணைந்து பயன்படுத்தப்படுவதாகும். பொருள் தேவைகளுக்கு மேலதிகமாக, நவீன CAM முறைமைகள் நிகழ்நிலைக் கட்டுப்பாடுகளையும் ரோபோக்களையும் உள்ளடக்குகின்றன.

  உதாரணம்: **PQR Publishers** புத்தகங்களைத் தானாக அச்சிட்டு, தாள்களைப் பிணைத்து புத்தகமாகக் கட்டுவதற்கு CAM இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும். குறிப்பாக, அவர்கள் அதிக பிரதிகளை உருவாக்கும்போது.

- **கணினி ஒருங்கிணைக்கப்பட்ட தயாரிப்பு (CIM):** கணினி ஒருங்கிணைந்த உற்பத்தி என்பது (CIM) பொருள்களைத் தயாரிக்கும்போது கணினியால் கட்டுப்படுத்தப்படும் இயந்திரம் மற்றும் தன்னியக்க முறைமைகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. கணினி உதவி வடிவமைப்பு (CAD) மற்றும் கணினி உதவி தயாரிப்பு (CAM) போன்ற பல்வேறு தொழினுட்பங்களை CIM ஒருங்கிணைத்து, வழுவற்ற தயாரிப்புச் செயன்முறையை வழங்குகிறது. இது கைமுறையான உழைப்பைக் குறைத்து மீண்டும் மீண்டும் செய்யும் பணிகளை தன்னியக்கப்படுத்துகிறது.

  உதாரணம்: **PQR Publishers,** CIM ஐப் பயன்படுத்தி புத்தக அட்டைகளைத் தன்னியக்கமாகத் தயாரிக்கலாம் என்பதுடன் அச்சிடும் செயன்முறையையும் கட்டுப்படுத்தலாம். இது பெரியளவான கட்டளைகளை விரைவாக அச்சிடவும் கைமுறை வேலைகளால் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்கவும் உதவுகிறது.

- **செயற்கை நுண்ணறிவும் (AI) இயந்திரக் கற்றலும் (ML):** செயற்கை நுண்ணறிவு (AI) என்பது இயந்திரங்கள், குறிப்பாக கணினி முறைமைகள் மூலம் மனித நுண்ணறிவுச் செயன்முறைகளை உருவகப்படுத்தல் ஆகும். இந்தச் செயன்முறைகளில் கற்றல் (தகவல்களைப் பெறுதல் மற்றும் தகவல்களைப் பயன்படுத்துவதற்கான விதிகள்), பகுத்தறிவு (அண்ணளவான அல்லது திட்டவட்டமான முடிவுகளை அடைவதற்கான விதிகளைப் பயன்படுத்துதல்) மற்றும் சுய-திருத்தம் ஆகியன உள்ளடங்கும்.

உதாரணம்: **PQR Publishers** கையெழுத்துப் பிரதிகளில் எழுத்துப் பிழைகள், இலக்கணம் மற்றும் வடிவமைப்புப் பிழைகளைச் சரிபார்க்க AI இன் பிழைதிருத்தல் கருவியைப் பயன்படுத்தலாம். இது அதன் நேரத்தை மிச்சப்படுத்துவதுடன், கைமுறையாகத் திருத்துவதற்கான தேவையையும் குறைக்கிறது.

- **கட்டச் சங்கிலி:** கட்டச்சங்கிலி என்பது வங்கிகள் போன்ற எந்தவொரு இடையீட்டாளர்களுமின்றி வலையமைப்பு ஊடாக உடனடிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு தனிநபர்கள் மற்றும் கம்பனிகளை அனுமதிக்கின்ற ஒரு தொழினுட்பமாகும். கட்டச்சங்கிலி மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் பூரணமாகப் பாதுகாப்பானது என்பதுடன் கட்டச்சங்கிலித் தொழினுட்பத்தின் தொழிற்பாட்டின் மூலம் என்ன நடந்தது என்பதற்கான பதிவாகவும் பேணப்படுகின்றன. கட்டச்சங்கிலியில் மேற்கொள்ளப்படும் எந்தப் பதிவையும் விடயம் நடைபெற்ற பின்னர் மாற்ற முடியாது என்பதை வலுவான கணினிக் குறியீடுகள் உறுதி செய்கின்றன.

உதாரணம்: **PQR Publishers** கட்டச்சங்கிலித் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி யாருக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதைக் கண்காணிக்கவும், நூலாசிரியர்களுக்கு விசுவாசக் கொடுப்பனவுகளை தன்னியக்கமாக அனுப்பவும் முடியும். இது செயன்முறையை மிகவும் பாதுகாப்பான, துல்லியமான மற்றும் வெளிப்படைத்தன்மையுடையதாகவும் மாற்றுகிறது.

**(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 05 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| | | |
|---|---|---|
| **அலகு 5 –** மனித வள முகாமைத்துவம் **(HRM)** | | |
| கற்றற் பேறுகள் | - | HRM தொழிற்பாடு எவ்வாறு நிறுவன நோக்கங்களை அடைவதற்குப் பங்களிக்கிறது என்பதை ஆராய்தல். |
| | - | HRM இன் வளர்ந்துவரும் போக்குகளையும் HR டிஜிடல்மயமாக்கல் நடைமுறைகளையும் விபரித்தல். |

**(a)** (1) **சரியான நபர்களை வாடகைக்கமர்த்தல்:**

கம்பனியானது சரியான திறன்களைக் கொண்ட மற்றும் கம்பனியின் தேவைகளுக்கு ஏற்ற நபர்களைக் கண்டுபிடித்து, வாடகைக்கமர்த்த HR உதவுகிறது. இது வணிக இலக்குகளை அடைவதற்கு முக்கியமானதாகும்.

உதாரணம்: KLM இல் HR ஆனது கற்றல் அனுபவத்தின் தரத்தை மேம்படுத்த திறமையான பாடநெறி விருத்தியாளர்கள் மற்றும் நிகழ்நிலை அறிவுறுத்துநர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியும்.

(2) **ஊழியர்களின் செயலாற்றுகையை முகாமை செய்தல் :**

ஊழியர்கள் தங்களுடைய வேலைகளை எவ்வளவு சிறப்பாகச் செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க HR முறைமைகளை அமைக்கிறது. அத்துடன் கம்பனியின் இலக்குகளில் கவனம் செலுத்தவும் உதவுகிறது.

உதாரணம் (**KLM learning**): கற்பகவர்கள் எத்தனை பேர் ஒரு பாடநெறியைப் பூர்த்தி செய்கிறார்கள் அல்லது அதில் எவ்வளவு திருப்தி அடைகிறார்கள் என்பதன் அடிப்படையில் HR ஆனது ஊழியர்களின் செயலாற்றுகையை அளவிட முடியும்.

(3) **பயிற்சி மற்றும் வளர்ச்சியை ஆதரித்தல் :**

ஊழியர்கள் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதைப் பேணுவதற்கு HR உதவுகிறது. எனவே அவர்கள் தங்கள் வேலைகளை சிறுப்பாகச் செய்து, தங்கள் தொழிலில் வளர முடியும்.

உதாரணம் (**KLM Learning**): KLM இனுடைய HR அணி புதிய கற்பித்தல் கருவிகளைக் கற்றுக்கொள்ள அல்லது சிறந்த நிகழ்நிலைப் பாடங்களை எவ்வாறு வடிவமைப்பது என்பதற்கான பயிற்சியை ஊழியர்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.

(4) **ஊழியர்களை மகிழ்ச்சியாகவும் விசுவாசமாகவும் வைத்திருத்தல் :**

ஊழியர்கள் தங்கள் வேலைகளைப் பற்றி நல்ல விதமாக உணர வைப்பதை உறுதிசெய்ய HR பணியாற்றுகிறது. இது அவர்கள் நீண்ட காலம் தங்கவும் சிறப்பாக வேலை செய்யவும் உதவுகிறது.

உதாரணம் (**KLM Learning**): HR ஆனது நெகிழ்வான பணி அட்டவணைகளை வழங்க முடியும். அத்துடன் ஊழியர்களை அவர்களின் சிறந்த பணிக்காக ஏற்பிசைவு செய்யவும் முடியும். இதனால் அவர்கள் ஊக்கமுள்ளவர்களாக இருப்பார்கள்.

(5) **ஒரு நல்ல வேலைக் கலாசாரத்தை உருவாக்குதல் :**

மக்கள் மதிக்கப்படுகிறார்கள், ஆதரிக்கப்படுகிறார்கள், ஒன்றாக வேலை செய்ய ஊக்கப்படுத்தப் படுகிறார்கள் என்பதை உணரும் ஒரு நேர்மறையான சூழலை கட்டியெழுப்ப HR உதவுகிறது.

உதாரணம் (**KLM Learning**): HR ஆனது அணி வேலை மற்றும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்க முடியும். எனவே KLM ஊழியர்கள் கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரு பணியில் தாங்கள் ஒரு பகுதியாக இருப்பதாக உணர்கிறார்கள்.

(6) **அணிகள் சிறப்பாகத் தொடர்புகொள்ள உதவுகிறது :**

HR ஆனது ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கிடையே தெளிவான மற்றும் திறந்த தொடர்பாடலை ஆதரிக்கிறது. இது சிக்கல்களைத் தவிர்க்க உதவுவதுடன் அணி வேலையையும் மேம்படுத்துகிறது.

உதாரணம் (**KLM Learning**): HR ஆனது வழக்கமான நிகழ்நிலைக் கூட்டங்களை நடத்தலாம் அல்லது தொலைதூர அணிகளை இணைத்து தகவல் தெரிவிக்க பின்னூட்டக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.

(7) **எதிர்கால ஊழியர்களின் தேவைகளுக்கான திட்டமிடல் :**

எதிர்காலத்தில் கம்பனிக்கு எந்த வகையான ஊழியர்கள் தேவைப்படுவார்கள் என்பதைப் பார்க்க HR சிந்தித்துப் பார்ப்பதுடன் அதற்காக முன்கூட்டியே தயாராகிறது.

உதாரணம் (**KLM Learning**): KLM ஆனது புதிய பிராந்தியங்களில் விஸ்தரிக்க விரும்புகிறது எனின், HR ஆனது பிற மொழி பேசுபவர்களை அல்லது வெவ்வேறு கலாசாரங்கள் பற்றிப் புரிந்து கொண்டவர்களை பயிற்றுவிப்பாளராக வாடகைக்கமர்த்த ஆரம்பிக்க முடியும்.

**(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(b)**

- **தொழில்தருநர் பண்டக்குறி :** இன்று பெரும்பாலான நிறுவனங்கள் திறமையான, அறிவார்ந்த, மற்றும் அனுபவமுள்ள ஊழியர்களை நிறுவனத்திற்கு ஈர்ப்பது ஓர் உண்மையான சவாலாக இருப்பதை உணர்ந்துள்ளன. அதிகளவான நிறுவனங்கள் ஒரு சிறந்த மனித வள முறைமையைப் பின்பற்றுவதன் மூலம் சமூகத்தில் தங்கள் பண்டக்குறியை ஊக்குவிக்க முயற்சிக்கின்றன. திறமையான வேலைப் படையை நிறுவனத்திற்கு ஈர்க்க முடியும் என்பது அடையாளங் காணப்பட்டுள்ளது.

- **ஊழியர்களின் வெளிமூலமிடுதல் :** அதிகளவான நிறுவனங்கள் தற்காலிக அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதுடன் இது சில முகாமைத்துவ நிபுணர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காகப் பயன்படுத்துகின்றன.

- **ஊழியர்களின் வேலை வாழ்க்கைச் சமநிலையை ஊக்குவித்தல் :** இன்று, நிறுவனம் ஊழியர்களை நிறுவனத்தில் தக்கவைத்துக் கொள்வதற்காக அவர்களின் வேலை மற்றும் குடும்ப வாழ்வை சமநிலையில் வைத்துக் கொள்கிறது. குறிப்பாக, முகாமையாளர்கள் வேலை செய்வதற்கான நெகிழ்வான நேர அட்டவணையை அறிமுகப்படுத்துகிறார்கள். அத்துடன் பணியாளர்கள் வீட்டிலிருந்தவாறே வேலை செய்வதற்கான வசதியையும் வழங்குகிறார்கள்.

- **தொலைத்தொடர்பு :** வேலைத் தலத்திற்குச் செல்லாமல் கணினி மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி வீட்டிலிருந்து வேலை செய்கிறார்கள். இது அமைவிடமற்ற வேலைத் தலமொன்றை உருவாக்குகிறது.

- **கற்றல் மற்றும் அபிவிருத்தித் தனிப்பயனாக்கம் :** நவீன கற்றல் மற்றும் அபிவிருத்தி நடைமுறைகள் ஒவ்வொரு ஊழியரினதும் தொழில் பொறுப்புக்கள் மற்றும் தொழில் அபிலாஷைகளுக்கு ஏற்ப பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சியை வழங்க செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிடல் கருவிகளைப் பயன்படுத்துகின்றன. KLM ஏற்கனவே அதன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தியுள்ளதால், இந்த அணுகுமுறை கற்றலை மேலும் பொருத்தமுடையதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் ஆக்குகிறது. தனிப்பட்ட ஊழியர்களுக்கான கற்றலை தனிப்பயனாக்குவதற்காக அடுத்த கட்டத்திற்கு அடியெடுத்து வைப்பது, அவர்கள் தங்களை அதிக மதிப்புமிக்கவர்களாக உணரவும் தங்களுடைய வகிபாகங்களுக்கு சிறப்பான முறையில் தயாராவதை உணரவும் உதவுகிறது. இது அதிக ஈடுபாடு மற்றும் ஊக்கத்திற்கு வழிவகுக்கும்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 06 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 4 – சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்.**

கற்றற் பேறுகள் – பண்டக் குறியிடல் மற்றும் அதன் முக்கியத்துவத்தை விபரிப்பர்.

– டிஜிடல் சந்தைப்படுத்தலின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை விபரிப்பர்.

**(a)**

- **பண்டக்குறியிடலானது அங்கீகாரம் பெறுகிறது :** பண்டக்குறியிடல் வணிகத்திற்கு முக்கியமானதாகும். ஏனெனில், அது ஒரு நிறுவனம் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நுகர்வோருக்குத் தெரியப்படுத்துவதற்கும் வழிவகுக்கிறது. சின்னம் ஆனது பண்டக்குறியிடலின் மிக முக்கியமான அங்கமாகும். குறிப்பாக, இந்தக் காரணியைப் பொறுத்தவரை, இது அடிப்படையில் கம்பனியின் முகமாக உள்ளது.

- **பண்டக்குறியிடல் வணிகத்தின் மதிப்பை அதிகரிக்கிறது :** எதிர்கால வணிகத்தை உருவாக்க முயற்சிக்கும்போது பண்டக்குறியிடல் முக்கியமானதாகும். மேலும் வலுவாகத் தாபிக்கப்பட்ட பண்டக்குறி கம்பனிக்கு தொழில்துறையில் அதிக செல்வாக்கை வழங்குவதன் மூலம் வணிகத்தின் மதிப்பை உயர்த்த முடியும். இது முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்கும்.

- **பண்டக்குறியிடல் புதிய வாடிக்கையாளர்களை உருவாக்குகிறது :** வலுவான பண்டக்குறியிடல் என்பது பொதுவாக நுகர்வோர் மத்தியில் கம்பனி பற்றிய நேர்மறையான அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. மேலும் அவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய பெயரைப் பயன்படுத்துவது தொடர்பான பரிச்சயம் மற்றும் அனுமானிக்கப்பட்ட நம்பகத்தன்மை காரணமாக அவர்கள் கம்பனியுடன் வணிகம் செய்ய வாய்ப்புள்ளது. ஒரு பண்டக்குறி நன்கு நிறுவப்பட்டவுடன், வாய்மொழியாகச் சொல்வது கம்பனியின் சிறந்த மற்றும் மிகவும் பயனுறுதிமிக்க விளம்பரப்படுத்தல் நுட்பமாக இருக்கும்.

- **ஊழியர்களின் பெருமை மற்றும் திருப்தியை மேம்படுத்துகிறது :** ஊழியர்கள் ஒரு வலுவான பண்டக்குறியைக் கொண்ட நிறுவனத்தில் பணி புரிந்து, உண்மையிலேயே அந்தப் பண்டக்குறியின் பின்னால் நிற்கும்போது, அவர்கள் தங்கள் வேலையில் அதிக திருப்தி அடைவதுடன் அவர்கள் செய்யும் வேலையில் அதிகளவு பெருமை கொள்வார்கள். நற்பெயர் பெற்ற மற்றும் பொதுமக்களிடையே அதிக மதிப்பைப் பெறும் ஒரு பண்டக்குறியில் பணி புரிவது அக்கம்பனியில் பணி புரிவதை மிகவும் சுவாரஸ்யமாகவும் நிறைவாகவும் ஆக்குகிறது.

- **சந்தையில் நம்பிக்கையை உருவாக்குதல் :** நன்கு தாபிக்கப்பட்ட பண்டக்குறியானது நுகர்வோர், சாத்தியமான சேவைநாடுநர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப கம்பனிக்கு உதவும். மக்கள் கம்பனியுடன் வணிகம் செய்ய அதிகம் வாய்ப்புள்ளது.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(b)**

- **உலகளாவிய அணுகல் :** டிஜிடல்மயப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் அணுகுமுறையானது ஒரு வணிகத்தை ஒரு சிறிய முதலீட்டுடன் மாத்திரம் உலகளாவிய ரீதியில் புதிய சந்தைகள் மற்றும் வாடிக்கையாளர்களைக் கண்டறிய அனுமதிக்கிறது. **Thrive Cafe** ஐப் பொறுத்தவரை, இது உள்ளூர்ப் பகுதிக்கு அப்பால் சுற்றுலாப் பயணிகள், நிகழ்நிலை வாடிக்கையாளர்கள் அல்லது உரிமையாளர் ஆர்வத்தை ஈர்க்க முடியும்.

- **குறைந்த செலவு :** முறையாகத் திட்டமிடப்பட்ட மற்றும் நன்கு இலக்கு வைக்கப்பட்ட டிஜிடல் சந்தைப்படுத்தல் பிரச்சாரம் ஆகியன பாரம்பரிய சந்தைப்படுத்தல் முறைகளை விட மிகக் குறைந்த செலவில் சரியான வாடிக்கையாளர்களைச் சென்றடைய முடியும்.

- **முடிவுகளைக் கண்காணித்து அளவிடுவதற்கான ஆற்றல் :** இணையப் பகுப்பாய்வு மற்றும் பிற நிகழ்நிலை அளவீட்டுக் கருவிகள் மூலம் அதன் நிகழ்நிலைச் சந்தைப்படுத்தலை அளவிடுவதானது பிரச்சாரம் எவ்வளவுக்கு பயனுறுதி மிக்கதாக இருந்தது என்பதைக் பார்ப்பதை எளிதாக்குகிறது.

- **தனிப்பயனாக்கம் :** வாடிக்கையாளர் தரவுத்தளம் வணிக இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டால், யாராவது தளத்தைப் பார்வையிடும் போதெல்லாம், வணிகம் அவர்களை மீண்டும் வாடிக்கையாளர்களுக்கான இலக்கிடப்பட்ட சலுகைகளுடன் வரவேற்க முடியும். அவர்கள் வணிகத்திடமிருந்து எவ்வளவு அதிகமாக வாங்குகிறார்களோ, அவ்வளவு அதிகமாக வணிகம் தங்கள் வாடிக்கையாளர் சுயவிபரத்தைத் செம்மைப்படுத்தி அவர்களுக்கு திறம்பட சந்தைப்படுத்த முடியும்.

- **வெளிப்படைத்தன்மை :** சமூக ஊடகங்களில் தம்மை ஈடுபடுத்தி, அதைக் கவனமாக முகாமை செய்வதன் மூலம், வணிகம் வாடிக்கையாளர்களின் விசுவாசத்தை உருவாக்கி, எளிதில் ஈடுபடக்கூடிய நற்பெயர் மிக்க பண்டக்குறி பிம்பத்தை உருவாக்க முடியும்.

- **சமூக நாணயம் :** டிஜிடல் சந்தைப்படுத்தல் ஆனது வணிகங்கள் உள்ளடக்க சந்தைப்படுத்தல் உத்திகளைப் பயன்படுத்தி, ஈடுபாட்டுடன்கூடிய பிரச்சாரங்களை உருவாக்க அனுமதிக்கிறது. இந்த உள்ளடக்கம் (படங்கள், காணொளிகள், கட்டுரைகள்) பயனரிடமிருந்து பயனருக்கு அனுப்பப்பட்டு வைரலாகின்ற சமூக நாணயத்தைப் பெறலாம்.

- **மேம்படுத்தப்பட்ட மாற்று வீதங்கள் :** வணிகத்திற்கென ஒரு வலைத்தளம் இருக்குமாயின், அதன் வாடிக்கையாளர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சில சொடுக்குகள் மாத்திரமே தொலைவில் இருப்பார்கள். மக்கள் எழுந்து தொலைபேசி அழைப்பை ஏற்படுத்த அல்லது கடைக்குச் செல்ல வேண்டும் எனக் கோரும் பிற ஊடகங்களைப் போலல்லாது, டிஜிடல் சந்தைப்படுத்தல் தடையற்றதாகவும் உடனடியானதாகவும் இருக்கும்.

**(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***பகுதி B முடிவு***

**ஒரு கட்டாய வினா** | **பகுதி C**

(25 புள்ளிகள்)

***வினா 07 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 1 –** முகாமைத்துவத்திற்கான அறிமுகமும் முகாமைத்துவத்தின் வெவ்வேறு கண்ணோட்டங்களும்

**அலகு 2 -** முகாமைத்துவச் செயன்முறையின் தொழிற்பாடுகள்

**அலகு 7 –** உபாய முகாமைத்துவத்திற்கான அறிமுகம்

கற்றற் பேறுகள் - புதிய தொழினுட்பத்துடன் நிதிசார் நிபுணர்களுக்குத் தேவையான ஆற்றல்களை விபரிப்பர்.

- ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவத்தை விபரிப்பர்.
- தீர்மானமெடுத்தலில் தகவலின் முக்கியத்துவத்தை ஆராய்வர்.
- நிறுவனமொன்றிற்கான உபாயத்தின் வகிபாகத்தை விபரிப்பர்.
- உபாய முகாமைத்துவத்தின் செயன்முறையை விபரிப்பர்.

**(a)**

(1) தொடர்பாடல் திறன்கள்.

(2) பிரச்சினை தீர்க்கும் திறன்கள்.

(3) தனிமனிதத் திறன்கள்.

(4) தந்திரோபாய இயலுமைகள்.

(5) தலைமைத்துவத் திறன்கள்.

(6) மாற்ற முகாமைத்துவத் திறன்கள்.

(7) இடர் முகாமைத்துவத் திறன்கள்.

(8) பகுப்பாய்வுத் திறன்கள். **(01 புள்ளி வீதம், 04 புள்ளிகள்)**

**(b)**

(1) **உற்பத்தித்திறனை அதிகரித்தல் :** ஊக்கப்படுத்தலானது ஊழியரின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான ஒரு செயன்முறையாகும். ஊக்கப்படுத்தல் ஊழியரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் அதன் மூலம் தனது சிறந்த திறமையுடன் பணியாற்றுவதற்கான உந்துதலையும் உருவாக்குகிறது. ஊக்கப்படுத்தப்பட்ட ஓர் ஊழியர் மற்றொரு ஊக்கமில்லாத ஊழியரை விட நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக அதிக முயற்சி எடுக்கத் தயாராகவிருப்பார்.

(2) **நிறுவன வினைத்திறனை உறுதி செய்தல் :** நிறுவனத்திலுள்ள ஊழியர்களின் மனப்பான்மையை மாற்றுவதில் ஊக்கப்படுத்தலானது பிரதான பங்கை வகிக்கிறது. ஊக்கப்படுத்தலின் மூலம் அலட்சிய மனப்பான்மைகள் மிகவும் வினைத்திறனான முறையில் வெளிவருகின்றன. அத்தகைய சாதகமான மனப்பான்மையின் இருப்பு நிறுவனம் வெற்றிபெற அனுமதிக்கிறது.

(3) **விசுவாசமான வேலைப்படையை உறுதி செய்தல் :** நன்கு ஊக்கமளிக்கப்பட்ட வேலைப் படை என்பது ஒரு விசுவாசமான வேலைப் படை ஆகும். ஊக்கமளிக்கப்பட்ட ஊழியர்கள் தங்கள் இலக்குகள் மற்றும் நோக்கங்களை நோக்கி உயர் மட்ட அர்ப்பணிப்பு மற்றும் ஒழுக்கத்தைக் கொண்டுள்ளனர். இதனால் ஊக்கமானது ஊழியர்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதுடன், புதிய ஊழியர்களைத் தொடர்ந்து ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய தேவையையும் குறைக்கிறது.

(4) **எதிர்வினையாற்றும் வேலைப் படையை உறுதி செய்கிறது :** மாறிவரும் வணிகச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றியமைப்பது எந்தவொரு வெற்றிகரமான வணிகத்தினதும் முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது. மாற்றங்களுக்கு எளிதாக எதிர்வினையாற்றவும் தொடர்ந்து சீராகத் தொழிற்படவும் ஒரு நிறுவனத்திற்கு அதன் ஊழியர்களின் விரிவான விசுவாசமும் அர்ப்பணிப்பும் தேவை. இது நிறுவனம் செய்ய விரும்பும் மாற்றங்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்புகளைக் குறைக்கிறது. மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நிறுவனம் வினைத்திறனாக இருக்க இந்த விளைவு உதவுகிறது.

(5) **வழிநடத்தலை எளிதாக்குகிறது :** வழிநடத்தல் என்பது ஒரு முக்கிய முகாமைத்துவத் தொழிற்பாடாக இருப்பதுடன், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ஊக்கப்படுத்தல் என்பது வழிநடத்தலின் ஒரு பெரும் பகுதியாக உள்ளது. வழிநடத்தல் என்பது வரையப்பட்ட ஒரு திட்டத்திற்கு இணங்க, வழிப்படுத்துவது அல்லது செயலைத் தொடங்குவதுடன் சம்பந்தப்பட்ட ஒரு செயன்முறையாகும். இது ஊழியர்கள் அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்துடன் உண்மையாக வேலை செய்ய வேண்டும் என்பதைத் தேவைப்படுத்துகிறது. எனவே முகாமையாளர் தீர்மானிக்கின்ற திசையில் ஊழியர்கள் செல்லும்போது மட்டுமே வழிநடத்தல் செயன்முறை சாத்தியமாகும் என்பதுடன் இதற்கு ஊக்கப்படுத்தப்பட்ட வேலைப் படை ஒன்று தேவைப்படுகிறது.

**(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(c)**

| தீர்மானமெடுத்தல் நிலைகள் | தகவலின் வகிபாகம் |
|---|---|
| **பிரச்சினை/ வாய்ப்பை இனங்காணலும் கட்டமைத்தலும்** | ஒரு பிரச்சினையை இனங்கண்டு, அதனை ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் வைப்பதற்கு ஒருவருக்கு தகவல் தேவையாகும். ஒரு பிரச்சினை அல்லது வாய்ப்பு பற்றிய தகவல் இல்லாமல், தீர்மானமெடுத்தல் செயன்முறைகூட தொடங்குவதில்லை. |
| **பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்தல்** | பிரச்சினை ஏற்பட்ட சூழல் பற்றிய தகவல் இல்லாமல், ஒருவர் அதன் மீது எவ்வித தீர்மானத்தையும் எடுக்க முடியாது. ஒரு வகையில், சூழல் பற்றிய தகவல் பிரச்சினையை வரையறுக்கிறது. |
| **மாற்றுத் தெரிவுகளை உருவாக்குதல்** | தீர்மானமெடுப்பதற்கான மாற்றுத் தெரிவுகளை உருவாக்குவதில் தகவலானது ஒரு பிரதான அங்கமாக உள்ளது. பயனுறுதிவாய்ந்த மாற்றுத் தெரிவுகளை ஏற்பிசைவு செய்யும் பொருட்டு தகவல்களை உருவாக்குவதற்கு பல்வேறு மட்டங்களிலும் முகாமையாளர்கள் ஆய்வுகளில் ஈடுபட வேண்டும். |
| **சிறந்த மாற்றுத் தெரிவை தேர்வு செய்தல்** | மாற்றுத் தெரிவுகளின் பொருத்தப்பாடு பற்றிய தகவல்களின் அடிப்படையில், சிறந்த மாற்றுத் தெரிவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முகாமையாளர்கள் அவற்றிலிருந்து சிறந்ததைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு தெரிவுகளையும் மதிப்பீடு செய்வதற்கு ஒரு தகவல் வரிசையைக் கொண்டிருக்க வேண்டும். |

**(02½ புள்ளிகள் வீதம், 05 புள்ளிகள்)**

**(d)**

- **புதுமை :** புதுமையான தந்திரோபாயமானது ஆக்கபூர்வமான தந்திரோபாய உருவாக்கத்தின் விளைவாக ஏற்படுகிறது. இவை முன்னர் செயற்படுத்தப்படாத புதிய/ புதுமையான யோசனைகளை அடிப்படையாகக் கொண்டவை. புதுமை இல்லாவிட்டால், போட்டியாளர்கள் தந்திரோபாயத்தைப் பின்பற்றுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே தந்திரோபாயத்தை பிரத்தியேகமாகவும் சவால்மிக்கவர்களிடமிருந்து வேறுபடுத்தவும் ஒரு புதுமையான/ படைப்பாற்றல் மிக்க உள்ளடக்கத்தை தந்திரோபாயம் கொண்டிருத்தல் வேண்டும்.
- **இரகசியமாக வடிவமைக்கப்பட்டது :** தந்திரோபாயத்தின் பிரதான காரணிகளாக இருப்பவை யாதெனின், அதன் நடைமுறைகள் குறித்து எப்போதும் போட்டியாளர்களிடம் ஆர்வத்தை உருவாக்குவதாகும். நிறுவன தந்திரோபாயத்தின் இரகசியத்தைப் பேணும் நோக்கத்திற்காக நடைமுறைகளை வகுப்பதில் முகாமையாளர்கள் அதை ஒரு தனிப்பட்ட செயலாகக் கருத வேண்டும்.
- **நுண்ணறிவு :** தந்திரோபாயங்கள் புத்திசாலித்தனமாக உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில் புத்திசாலித்தனமான தந்திரோபாயங்களைக் கொண்டுள்ள நிறுவனங்கள், நீடித்திருக்கத்தக்க போட்டி அனுகூலங்களைப் பெற முடியும்.
- **ஏமாற்றுதல் :** ஒரு தந்திரோபாயம் ஏமாற்றும் பண்புகளை உள்ளடக்கியிருக்கிறது. மேலும் அது இலக்குப் போட்டியாளர்களை தவறாக வழிநடத்த வேண்டும். ஆனால் அது நெறிமுறை சார்ந்த வழியில் இருத்தல் வேண்டும். ஏமாற்றும் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தும்போது வணிகமானது எல்லைகள்/ வரம்புகளுக்கு அப்பால் செயற்படாமல் கவனமாக இருத்தல் வேண்டும். மேலும், அது மக்களை சட்டவிரோதமான முறையில் தவறாக வழிநடத்தக்கூடாது.
- **செலவு குறைந்தவை :** ஒரு தந்திரோபாயம் செலவு குறைந்ததாக மாற வேண்டும். மேலும் அது முதலீட்டில் சிறந்த வருவாயை உருவாக்குவதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(e)**

(1) பணி மற்றும் நோக்கங்கள்.

(2) நிலைமைக் கணக்காய்வு.

(3) சுற்றுச்சூழல் பகுப்பாய்வு.

(4) நிறுவன மதிப்பீடு.

(5) தந்திரோபாய விருப்பத்தெரிவை உருவாக்குதல்.

(6) தந்திரோபாய விருப்பத்தெரிவை மதிப்பீடு செய்தலும் தேர்வு செய்தலும்.

(7) தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்தல்.

(8) மீளாய்வும் கட்டுப்பாடும். **(01 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 25)**

***பகுதி C முடிவு***